பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை ? காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ., எம். பி.

மலர்: 20] சென்னை: ஆனி 27 (10—7—72) திங்கள் வெளியூர்: ஆனி 28 (11—7—72) செவ்வாய் [இதழ்: 22

வெள்ளச் சேதம்

புதுடில்லி, சூலை 10—

இந்தியாவில் 1971-ம் ஆண்டில் வெள்ளத்திலை சுமார் 5 கோடியே 70 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டனர்.

1954-க்குப் பின் சென்ற ஆண்டு தான் மிக மோசமான வெள்ளம் வந்தது.

சென்ற ஆண்டு வெள்ளத்தினால் 1 கோடியே 25 இலட்சம் ஹெக்டார் நிலம் பாதிக்கப்பட்டது. உத்தரப் பிரதேசம், பீகார், ஒரிசா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்கள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டவைகளாகும்.

சூலை 4-க்குமுன் கைதானவர்கள்மீதுள்ள வழக்குகள்

அனைத்தையும் கைவிட அரசு உத்தரவு

சென்னை சூலை 10—

விவசாயிகள் கிளர்ச்சியையொட்டி சூலை 4-ம் நாள் அல்லது அதற்குமுன்பாகக் கைது செய்யப்பட்டவர்களின்மீதுள்ள வழக்குகள் அனைத்தையும் கைவிடுமாறு தமிழக அரசு உத்தரவிட்டிருக்கிறது.

பாலங்கள் தகர்ப்பு -- சாலைகளில் தடங்கல்களை அமைத்தது -- வன்செயல் நடவடிக்கைகளில் ஈடுபட்டது போன்ற குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டுள்ள வழக்குகள் திரும்பப் பெறப்படமாட்டாது.

தலைமைச் செயலாளர் தகவல்

இதன் தொடர்பாகத் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் பி. சபாநாயம் தெரிவித்திருப்பதாவது:—

"விவசாயிகளின் கிளர்ச்சியின் போதும், சூலை 5-ம் நாள் நடைபெற்ற 'பந்த்' நடவடிக்கையின் தொடர்பாகவும் கி. பு. கோ. 151 தடுப்புப் பிரிவின்படியும் -- இ. பி. கோ. 120-பி சதிப் பிரிவின்கீழும் -- இ. பி. கோ. 117 உடந்தைப் பிரிவின்கீழும் -- மற்றும் இத்தகைய பிரிவுகளின்கீழும் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு தமிழக அரசு உத்தரவிட்டிருக்கிறது."

மோதுதலை உருவாக்க எதிர்க் கட்சிகள் திட்டம்

நிலைமையை விளக்கிக் கழகத் தலைவர் கலைஞர் அறிக்கை

வன்முறைக் கண்டன நாள் பொதுக்கூட்டம் ஒருநாள் முன்னதாக நடைபெறும்

சென்னை, சூலை 9—

தி. மு. கழகத் தோழமைக் கட்சிகளின் சார்பில் 16-7-72 அன்று நடைபெறவிருந்த வன்முறைக் கண்டன நாள் பொதுக்கூட்டங்கள், ஒருநாள் முன்னதாக (15-7-72) மாற்றிவைக்கப்பட்டுள்ளன! இதற்கான காரணங்களை விளக்கிக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

"சூலை 8-ந்தேதி காலை 10-மணியளவில் கூடிய தி. மு. க. மற்றும் தோழமைக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, சூலை 16-ந்தேதி தமிழ்நாடு முழுவதும் 'வன்முறைச் செயல் கண்டன நாள்' பொதுக்கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டு — அந்த அறிவிப்பு அன்று மாலையே எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்திருக்கிறது.

அந்தச் செய்திக்கும் பிறகு, அன்று மாலை கூடிய வலது கம்யூனிஸ்டு — இந்திரா காங்கிரசு — சுதந்தரா — சிண்டிகேட் காங்கிரசு அடங்கிய விவசாய சங்கக் கமிட்டிக் கூட்டத்தில் அதே 16-ந் தேதி அவர்களும் கூட்டங்கள் நடத்தப் போவதாக அறிவித்திருப்பது கண்டு நான் வியப்படைந்தேன்.

இன்று (9-ந் தேதி) அவர்கள் துக்க தினம் கொண்டாடுவதை முன்னிட்டு நானும் -- மற்ற கழகத் தலைவர்களும் கலந்துகொள்வதாக இருந்த பொதுக்கூட்டங்களையெல்லாம் ஒத்திவைக்கச் சொல்லிவிட்டோம்.

குறிப்பாக இன்று (9-ந் தேதி) கடலூரில் பெரியார் சிலைத் திறப்பு விழாவுக்கு நான் செல்வதாக இருந்தது! அந்த நிகழ்ச்சியும், விவசாய சங்கத்தினர் நடத்தும் துக்க நாளையொட்டி வேறு தேதிக்கு மாற்றப்பட்டுவிட்டது.

ஆனால் தி. மு. க., முஸ்லிம் லீக் -- பார்வர்டு பிளாக் -- தமிழரசுக் கழகம் -- உழைப்பாளர் கட்சி -- திராவிடர் கழகம் ஆகிய கட்சிகள் எடுத்துள்ள முடிவுக்குப் போட்டியாக அதே நாளில் அவர்களும் கூட்டங்கள் நடத்துவதாக அறிவித்திருப்பது மோதலுக்கு இடம் தரக்கூடும்.

ஆகவே, தி. மு. க. -- தோழமைக் கட்சிகள் சார்பில் சூலை 16-ந் தேதி நடத்த இருந்த 'வன்முறைச் செயல் கண்டனக் கூட்டங்'களை, 15—7—72 சனிக்கிழமையன்று நடத்துவதென்று தோழமைக் கட்சிகள் சார்பில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

நாடாண்டு அனுபவம்பெற்ற காமராசரின் நாக்கு வன்முறைக்கு எதிராக அசையாதது ஏன்?

"வன்முறையைக் கண்டிப்பது பொதுவான விவகாரமாகும்! எந்தக் கட்சியினர் நடத்தினாலும், அதனைக் கண்டிக்கின்ற தூய உள்ளம் ஏற்பட்டாகவேண்டும்.

"அந்தப் பொது நோக்கோடுதான் -- 'வன்முறையின் பக்கம் எவருமே தலைவைத்துப் படுத்தலாகாது' என்பதை எடுத்துச் சொல்லத்தான், சூலை 15-ம் நாளன்று நாடு முழுவதும் 'வன்முறைச் செயல் கண்டன நாள்' கூட்டங்கள் நடைபெறுகின்றன! உடன்பிறப்புக்களே -- அதனை வெற்றியுறச் செய்யவேண்டிய பணி -- உங்கள் பணியாகும்"

என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், 'சூலை 15' என்ற தலைப்பில் 'முரசொலி' இதழில் எழுதியுள்ள கட்டுரையில் சுட்டிக்காட்டி வலியுறுத்தியிருக்கிறார்; அக்கட்டுரையில் அவர் கூறியிருப்பதாவது:—

"'வன்முறை கூடாது' என்று வலியுறுத்திச் சொல்லி நம்மை வளர்த்தவர் நமது அண்ணன்; அவர் நோயுற்று இருந்தபோது அவர் சிலையைச் சுற்றி முக்காடிட்டு ஊர்வலம் வந்து -- அவரது சிலை இருந்த பீடம் மறைகின்ற அளவுக்குக் கறுப்புத் துணிகளைப் பரப்பித் துக்கம் கொண்டாடினார்களே காங்கிரசார் -- அந்த வன்முறைச் செயலை -- அரசியல் அநாகரிகச் செயலைக் கண்டித்து ஒரு வரி எழுத 'பெரிய இடத்து' ஏடுகள் அப்போது முன்வரவில்லை.

அப்போதும் நமது அண்ணன் பொறுமையுடன் புன்னகைதான் புரிந்தார்! நம்மையும் அமைதி காக்கத்தான் பணித்தார்!

நாம் அரசு கட்டிலில் ஏறிய முதல் ஆண்டு நடைபெற்ற ஆகஸ்டு 15 விடுதலை நாள் விழாவின்போது, அண்ணாவும் -- நானும் -- அமைச்சர்களும் கவர்னர் மாளிகையில் விடுதலை நாள் தேநீர் விருந்து விழாவில் கலந்து கொண்டிருந்தோம்; அப்போது மவுண்ட் சாலையில் சென்ற காங்கிரசார் ஊர்வலம், 'முரசொலி' அலுவலகத்தில் தாக்குதலைத் தொடங்கியது! அலுவலக வாயிற்புறத்தில் நின்ற மூன்று சக்கர சிறிய கார் ஒன்றை உருத் தெரியாமல் நொறுக்கியது -- அலுவலகத்தைச் சேதப்படுத்தியது; அதையும் கண்டித்துப் பெரிய இடத்து ஏடுகள் ஒரு வரி எழுதிடவில்லை!

யாராயிருப்பினும் -- அவர்கள் வன்முறை வெறியாட்டங்களுக்கு ஒரு துளியும் இடங்கொடுத்தல் ஆகாது என்பதில், அண்ணனும்! -- அவர் வளர்த்த கழகமும் என்றைக்குமே அசையாத நம்பிக்கை கொண்டு இயங்கியதை -- இயங்கி வருவதை நாடறியும்!

1965-ம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் புரட்சி நடைபெற்றபோது வன்முறைச் செயல்கள் பல இடங்களில் நடைபெற்றதைக் கண்டித்து அண்ணா அவர்கள், ஒவ்வொரு நாளும் அறிக்கைகள் விடுத்துக்கொண்டே இருந்ததை யாரும் மறந்திருக்க முடியாது!

"சமூக விரோதிகள் -- வன்முறையாளர்கள் -- இடையில் நுழைந்துவிட்டார்கள்; ஆகவே, மாணவர்களே -- இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை நிறுத்துங்கள்" என்று அண்ணா அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்து அறிக்கை விடுத்தார்கள்.

ஆனால் இன்று? -- 'விவசாயிகள் பிரச்சினை' என்ற போர்வையில் வன்முறையாளர்கள் நடத்தியுள்ள நாச நடவடிக்கைகளைக் கண்டித்து இந்தியா முழுவதுமுள்ள ஏடுகள் பலவும் -- இங்குள்ள ஏடுகள் ஒன்றிரண்டும் எழுதியிருப்பதை நீ படித்திருப்பாய்.

போக்குவரத்துக்கள் நடைபெறாமல் தடுக்கப் பாலங்கள் தகர்க்கப்பட்டன; சாலைகளின் குறுக்கே கட்டை வண்டிகள் நிறுத்தப்பட்டன; 'ஆமாம் -- அப்படித்தான் நிறுத்திப் போக்குவரத்தைத் தடை செய்தோம்' என்று கிளர்ச்சித் தலைவர்களில் ஒருவரான கக்கன் அவர்களே ஒப்புக்கொண்டு விடுத்துள்ள செய்தி, சில ஏடுகளில்கூட வெளியாகியிருக்கின்றன!

துப்பாக்கிப் பிரயோகத்தில் மாண்டுவிட்ட தோழர்களுக்காக நான் மனம் பதறினேன; இரங்கல் தெரிவித்து அறிக்கை விடுத்தேன்; நாடே வன்முறைச் செயலைக் கண்டித்து நிற்கிறது; ஆனால் நாடாண்டு அனுபவம் பெற்ற நமது பெருந்தகையாளர் காமராசரின் நாக்கு, வன்முறைக்கு எதிராக அசையவே இல்லையே — பார்த்தாயா?

நேற்று மாலைகூட அவர் தலைமையிலே சென்னையிலே ஊர்வலம் -- ஆமாம் -- மௌன ஊர்வலம்!

இந்திரா காங்கிரசாரும் — வலது கம்யூனிஸ்டுகளும் — மன்றாடியார் குழுவினரும் விதைத்து -- அறுத்து -- களத்திலே கொட்டிய நெல் குவியலின்மீது அவர் நின்றுகொண்டு 'வெற்றிச் சிந்து' பாடுகிறார்! மன்னிக்கவும் -- 'வெற்றிச் சிந்தா -- வெறிச் சிந்தா' என்று நீ கேட்பது எனக்குப் புரிகிறது.

அவர் தலைமையில் மௌன ஊர்வலம் செல்லும் போதுகூட, அண்ணா சாலையில் பல இடங்களில் வன்முறைச் செயல்களை நடத்தியிருக்கிறார்கள்!

ஒருவேளை — உனக்கு நான் இதை எழுதிக் கொண்டிருக்கும்போது கடற்கரையில் காமராசர் — குறைந்தபட்சம் அவர் தலைமைவகித்த ஊர்வலத்தினர் நடத்திய வெறியாட்டங்களையாவது கண்டித்தும் பேசிக்கொண்டிருப்பார் என்று நம்புகிறேன்."

விஷமத்தனம் செய்தவரின் சாகசக் குரல்!

புதுடில்லி, சூலை 10 —

"தமிழ்நாட்டில் நடந்துவரும் தி. மு. கழக ஆட்சியைக் கவிழ்க்கும் எண்ணம் இந்திரா காங்கிரசுக்கு இல்லை.

"விவசாயிகள் சங்கக் கிளர்ச்சிக்குச் சமாதான முறையில் தீர்வு காண வேண்டுமென்பதே எங்கள் விருப்பமாகும்"

என்று அனைத்திந்திய இந்திரா காங்கிரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா கூறியிருக்கிறார்.

[இந்திரா காங்கிரசு செயற்குழுக் கூட்டத்தில், இந்தப் 'புண்ணியவான்'தான், தமிழ்நாட்டில் துப்பாக்கிப் பிரயோகத்தில் 48 பேர் கொல்லப்பட்டதாகவும் -- நூற்றுக்கணக்கான இந்திரா காங்கிரசுத் தொண்டர்களின் வீடுகள் தாக்கப்பட்டதாகவும் -- சோதனையிடப்பட்டதாகவும் கூறினார் என்பது நினைவிருக்கலாம்.]

சிம்லா உடன்பாடு -- செஞ்சீனத் தலைமையமைச்சர் வரவேற்பு

பீகிங், சூலை 10—

சிம்லாவில் ஏற்பட்ட இந்தியா -- பாகிஸ்தான் உடன்பாடு குறித்துச் சீனத் தலைமையமைச்சர் சூ-யென்-லாய் மகிழ்ச்சி தெரிவித்தார்; 'ஆசியாவில் சுமுக நிலை ஏற்படுவதற்கு உதவும் புதிய அம்சங்களில் இது ஒன்றாகும்' என்று அவர் குறிப்பிட்டார்.

நம்நாடு
ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ.
திருவள்ளுவராண்டு 2003 ஆனி 27 (10—7—72) திங்கள்

இந்திரா கட்சியின் சந்தர்ப்ப வாதம்!

தண்ணீரில் விழுந்து தத்தளிப்பவனுக்கு ஒரு துரும்பு கிடைத்தாலும் அதைத் தூணாகக் கருதிக் கரையேற முயலுவான். தண்ணீரில் தத்தளிப்பவன் நிலையில்தான் இன்று இந்திரா கட்சியினரும், சிண்டிகேட் கட்சியினரும் -- அவர்களின் கூட்டாளிகளும் உள்ளனர்.

அதனால்தான், ஒரு காசு மின்சாரக் கட்டண உயர்வைப் பிரமாதப்படுத்தி மறியல்--போராட்டம்--அர்த்தால் என்றெல்லாம் கூறி, தமிழ்நாட்டில் அமளி துமளியை உண்டாக்க முயன்ற சுயநல நிலப்பிரபுக்களுக்குப் பக்கபலமாக, மேற்சொன்ன கட்சியினர் செயல்பட்டிருக்கின்றனர்.

போராட்டம் என்றால், அதற்கு நியாயமான காரணங்கள் இருக்க வேண்டும்; அதற்கு மக்களின் பேராதரவும் கிடைக்க வேண்டும் ; அப்படிப்பட்ட போராட்டம்தான் வெற்றி பெறும்.

அற்பக் காரணங்களைக் காட்டித் தங்கள் சுயநல அரசியல் இலாப வேட்டைக்காகவே ஒரு போராட்டத்தை உருவாக்குபவர்கள் வெற்றி பெற முடியாது. அதுவும், நல்ல அரசியல் தெளிவு பெற்றுள்ள தமிழ்நாட்டில் அத்தகைய போராட்டம் பிசுபிசுக்கத்தான் போகும். அதற்குச் சரியான எடுத்துக்காட்டுதான், அண்மையில் நடத்தப்பட்ட அர்த்தால்.

உச்சவரம்புச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட ஒருசில நிலத் திமிங்கலங்கள் உருவாக்கிய விவசாயிகள் போராட்டத்துக்கு எந்தவித நியாயமும் இல்லை என்பதைத் தமிழ்மக்கள் நன்கு அறிவார்கள்.

''நாலரை கோடி மக்கள் வாழ்கின்ற தமிழ்நாட்டில், சில ஆயிரம் பணக்காரர்களை மட்டுமே பாதிக்கின்ற ஒரு காசு மின்சாரக் கட்டண உயர்வை எதிர்த்து ஒரு போராட்டமா ?'' என்று மக்கள் கேட்கின்றனர். இந்த அற்பக் காரணத்தை முன்வைத்துத்தான், தமிழ்நாட்டு 'அரசியல் அமங்கலக் கட்சி'களெல்லாம், 'கிடுகிடு போராட்டம்' என்று அறிவித்து - ஐந்தாம் தேதி காலிகளையும் கூலிகளையும் ஏவி வன்செயல்களைக் கட்டவிழ்த்துவிட்டுப் பார்த்தனர் ; தமிழ்மக்கள் சற்றும் அவர்களுக்கு இடம் கொடுக்கவில்லை ; போராட்டம் பிசுபிசுத்தது.

'தமிழ்நாட்டில் தட்டிக் கேட்க ஆள் இல்லை' என்று சொல்லும்படியாக இருபதாண்டுக்குமேல் ஆட்சிபீடத்தில் கொலுவீற்றிருந்த ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள்தாம் இந்திரா கட்சியினரும் – சிண்டிகேட் கட்சியினரும் ; அவர்கள் இப்போது இருந்ததையெல்லாம் இழந்து – அரசியல் அமங்கலிகளாகிவிட்டிருக்கின்றனர் ; தண்ணீரில் அமிழ்ந்து தத்தளிப்பவன் நிலையில் அவர்கள் இருக்கின்றனர் ; ஆகவேதான், யார் என்ன போராட்டம் நடத்தினாலும் -- அதற்குத் தூபம் போட்டுத் துணை போகிறார்கள்.

'துரும்பைப் பிடித்தக்கொண்டாவது கரை சேரமாட்டோமா' என்று தண்ணீரில் விழுந்தவன் எண்ணுவதுபோல், காமராசரும் – சுப்பிரமணியமும் – அவர்களுக்குத் துணைபோகும் கல்யாணசுந்தரங்களும்கூட எண்ணிச் செயல்படுகிறார்கள் ; அதனால்தான், 'போராட்டம் எதற்கு – அதன் நோக்கம் எப்படிப்பட்டது – என்பதைக்கூட அவர்கள் சிந்தித்துப் பார்க்கவில்லை !

'மின்சாரக் கட்டண உயர்வு கூடாது' என்பதும், 'விவசாய வருமான வரி ரத்து செய்யப்பட வேண்டும்' என்பதும் இந்திரா கட்சியின் கோரிக்கையா -- என்று தமிழக முதலமைச்சர், இந்திரா கட்சித் தலைமைக்கு வினாத் தொடுத்தார் ; அதற்கு இன்று வரை பதில் வந்ததாகத் தெரியவில்லை.

''இந்திரா கட்சி ஆளும் மாநிலங்களில் உள்ளதையெல்லாம்விடக் குறைவாக மின்சாரக் கட்டணம் வசூலிக்கும் தமிழ்நாட்டில் ஏன் போராட்டம் ? அதில் இந்திரா காங்கிரசும் ஏன் பங்கெடுத்துக் கொள்கிறது ?'' என்றெல்லாம் கலைஞர் கேட்டார் ; அதற்கும் இந்திரா காங்கிரசுத் தலைமை பதில் அளிக்கவில்லை.

அடுத்து, 'டில்லி அரசு விதித்துள்ள வரியை எதிர்த்துப் புதுடில்லியிலேயே தி. மு. கழகம் போராட்டம் துவங்கும்' என்று கலைஞர் அவர்கள் அறிவித்துவிட்ட பிறகு – கோவையில் அது பற்றி முடிவெடுக்கக் கழகப் பொதுக்குழு கூடவிருக்கும் இத்தருணத்தில் -- இந்திரா காங்கிரசுப் பிரமுகர் சி. சுப்பிரமணியம் மெதுவாக வாய்திறந்திருக்கிறார்.

''விவசாயக் காரியங்கட்காக மின்சாரக் கட்டணங்களை உயர்த்தியதை ஆட்சேபிக்கும் வகையில் தமிழ்நாட்டில் புதுக் காங்கிரசுக் கட்சியினர் இந்தக் கிளர்ச்சியில் கலந்து கொள்ளவில்லை ''

என்று இந்திரா கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் பேசிய சி. சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

பின், எதற்குப் பங்கெடுத்துக் கொண்டார்களென்றால்,

''விவசாயிகளின் கிளர்ச்சி அமைதியாக நடைபெற்றது ! அதை தி. மு. கழக அரசும் – தி. மு. கழகமும் ஒடுக்கும் விதத்தை எதிர்த்துத்தான புதுக் காங்கிரசு இந்த இயக்கத்தில் (விவசாயிகள் கிளர்ச்சியில்) கலந்துகொண்டிருக்கிறது''

என்கிறார் சி. சுப்பிரமணியம் !

திருவாளர் சுப்பிரமணியனாரின் இந்தக் கூற்றை வாதத்துக்காக ஒப்புக்கொள்கிறோம். அவருடைய கட்சி இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டதற்கு அவர் இப்போது கூறும் காரணம்தான் உண்மையானது என்றால், இதை முன்கூட்டியே அறிவித்திருக்கலாம் அல்லவா ?

''மின்சாரக் கட்டண உயர்வை எங்கள் கட்சி எதிர்க்கவில்லை ; தி. மு. கழக அரசின் போக்கை எதிர்த்துத்தான் நாங்கள் போராட்டத்தில் ஈடுபடுகிறோம்'' என்று ஜூலை 4ந் தேதியாவது அறிவித்திருக்கலாம் அல்லவா ?

நாணயமுள்ள அரசியல்வாதிகள் இப்படித்தான் செய்திருப்பார்கள். நாணயம் என்பதைத் தம் வாழ்நாளில் கடைபிடித்திராத சுப்பிரமணியங்களுக்கு இது எங்கே புரியப்போகிறது !

சி. சுப்பிரமணியம் வாயால் வெளியிடப்பட்ட இந்தக் கருத்தை, இந்திரா கட்சியின் தலைவரான சங்கர் தயாள் சர்மாவாவது, இதற்கு முன்பு கூறியிருக்கிறாரா என்றால், அதுவுமில்லை !

தமிழ்நாட்டில் 48 பிணங்கள் விழுந்ததாக கட்டுக்கதை கட்டி -- அவசர அவசரமாக அதைச் செயற்குழுக் கூட்டத்தில் வெளியிட்ட சர்மா -- நூற்றுக்கணக்கான இந்திரா காங்கிரசுக்காரர்கள் தாக்கப்பட்டதாகத் தமக்குத் தந்தி வந்திருப்பதாகக் 'காரியக்கமிட்டி'க் கூட்டத்தில் எடுத்துச் சொன்ன சர்மா, விவசாயிகளின் போராட்டத்தில் தனது கட்சியின் நிலை என்ன என்பதைத் தெளிவுபடுத்தத் தவறியது ஏன் ?

இதைவிடுத்து, அராஜகங்களைத் தூண்டிவிட்டுத் தூபம் போடும் வகையில் இதுநாள் வரை பேசிவிட்டு, இப்போது -- போராட்டம் மக்களாதரவு இன்றி, 'பிசுபிசுத்து'ப் போன பிறகு -- இப்படி ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து, அதை சுப்பிரமணியம் வாயால் சொல்ல வைப்பானேன் ?

''முதல்வர் கருணாநிதி விவசாயிகளுடன் பேச்சு நடத்தி விரைவில் ஒரு பைசல் காண வேண்டும் என்று தமிழ்நாடு புதுக் காங்கிரசு விரும்புகிறது'' என்று இப்போது கூறும் சி. சுப்பிரமணியம், போராட்டத்துக்கு முன்னரே இதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம் அல்லவா ?

தமிழக முதல்வர் விவசாயிகளுடன் பேச்சு நடத்த எப்போது மறுத்தார் ? அவர் என்ன பக்தவத்சலமா ? பேரறிஞர் அண்ணா வழிவந்தவராயிற்றே !

எனவே, என்றைக்கு வேண்டுமானாலும் விவசாயிகளின் பிரதிநிதிகள் தாராளமாக வந்து முதல்வரைச் சந்தித்துப் பேசலாம் ; ஆனால் ஒன்று ; பேச வேண்டிய பிரச்சினைகள் என்ன -- விவசாயிகளின் கோரிக்கைகள் அனைத்தும் நியாயமானவைதாமா -- அந்தக் கோரிக்கைகள் பற்றி இந்திரா கட்சியின் கருத்து என்ன -- என்பதையும் திருவாளர் சி. சுப்பிரமணியம் அவர்கள் விளக்கினால் நலமாக இருக்கும்.

பிற்போக்கு சக்திகளுடன் சேர்ந்துள்ள கட்சிகளின் உண்மை உருவத்தை உணர்த்திட-

அமைதி நிறைந்த தமிழகத்தில் வன்முறையாளர்களின் போக்கினை கண்டித்திட -

'வன்முறை கண்டன நாள்' பொதுக்கூட்டங்கள்

தமிழகமெங்கணும் நடத்துவதெனத் தோழமைக் கட்சித் தலைவர்கள் முடிவு

ஆலோசனை கூட்டத்திற்குப்பின் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையின் விவரம்

சென்னை, ஜூலை 10 —

''இந்திய ஒருமைப்பாட்டிலும் -- சனநாயக முறையிலும் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் தமிழ் மொழி -- தமிழர் நலன் பாதுகாக்கத் தேவையான மாநில உரிமைகளுக்காகப் போராடுவதுடன், பின்தங்கிய மக்கள் -- தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்கும், பாட்டாளி மக்கள் -- நடுத்தர மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கும் பாடுபட்டு வருகின்ற இன்றையத் தமிழக அரசுக்குத் தொல்லை கொடுக்கத் திட்டமிட்டு -- வன்முறைச் செயல்களைக் கட்டவிழ்த்துவிடும் செயல்களில் சில அரசியல் கட்சிகள், பிற்போக்குச் சக்திகளுடன் சேர்ந்து செயல்படுகின்றன.

''அவற்றின் உண்மை உருவத்தினை மேலும் மக்களுக்கு உணர்த்திடவும் -- அமைதி நிறைந்த தமிழகத்தில் வன்முறையாளர்கள் கையாளும் போக்கினைக் கண்டிக்கவும் தமிழகம் முழுவதிலும் 'வன்முறைக் கண்டன நாள்' பொதுக்கூட்டங்கள் நடைபெறும் -- (இந்தக் கூட்டங்களை ஜூலை 16-ஆம் நாளன்று நடத்துவதென்று தோழமைக் கட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருந்தது ; அதே நாளன்று எதிர்க் கட்சியினர் பொதுக்கூட்டங்கள் நடத்துவதென்று முடிவு செய்திருப்பதால் -- மோதுதல் ஏற்படாமல் தவிர்க்கும் வகையில் -- கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், 'வன்முறைக் கண்டன நாள்' பொதுக்கூட்டங்களை ஜூலை 15 ஆம் நாள் நடத்துவதென முடிவு செய்திருக்கிறார் ; இவ்வாறு மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது பற்றிய அறிக்கை ஒன்றை அவர் வெளியிட்டிருக்கிறார் ; அந்த அறிக்கையின் முழு விவரம் முதல் பக்கத்தில் வெளியாகியிருக்கிறது) -- அக்கூட்டங்களில், தோழமைக் கட்சிகளின் தலைவர்களும் -- செயல் வீரர்களும் கலந்துகொள்வார்கள்.''

ஜூலை 8-ஆம் நாளன்று தி. மு. கழகமும் -- தோழமைக் கட்சிகளும் நடத்திய கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது ! சென்னை — அண்ணா சாலையிலுள்ள தி.மு.க. சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் -- கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் ஜூலை 5-ஆம் நாள் நடைபெற்ற சம்பவங்கள் பற்றிக் கலந்தாலோசிக்கத் தோழமைக் கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கழகப் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் -- பொருளாளர் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். -- அமைச்சர்கள் என். வி. நடராசன் -- திருமதி சத்தியவாணிமுத்து -- ப. உ. சண்முகம் -- செ. மாதவன் -- மன்னை ப. நாராயணசாமி -- எஸ். ஜே. சாதிக் பாட்சா, எஸ். எஸ். தென்னரசு எம்.எல்.சி., நாஞ்சில் கி. மனோகரன் எம்.பி., இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., நீலநாராயணன் எம்.எல்.சி., முரசொலி மாறன் எம்.பி., கபிலநாதன் எம்.பி., காட்டூர் கோபால் எம்.எல்.சி., தேவராசன் எம்.எல்.ஏ. மற்றும் தமிழரசுக் கழகத் தலைவர்களான சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம் எம்.எல்.சி., டி. கே. சண்முகம் எம்.எல்.சி., மா. சி. கிருஷ்ணமூர்த்தி -- முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த ஏ. கே. ஏ. அப்துஸ் சமது எம்.பி., அப்துல் வகாப், ஜானி பாய் எம்.எல்.சி., திருப்பூர் மொய்தீன் எம்.எல்.ஏ., அப்துல் ஜபார் -- பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்த மூக்கையா தேவர், ஏ. ஆர். பெருமாள், கணபதி, கே. சின்னப்பன் -- திராவிடர் கழகத்தைச் சேர்ந்த கி. வீரமணி -- உழைப்பாளர் கட்சியைச் சேர்ந்த எஸ். எஸ். இராமசாமிபடையாச்சி ஆகியோர் 30 பேர் கலந்துகொண்டனர்.

மூன்று மணி நேரம் நடைபெற்ற இக்கூட்டத்தின் முடிவில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கையெழுத்திட்ட கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது ; அதன் விவரத்தை செய்தியாளர்களிடம் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார் ; அந்த அறிக்கையின் விவரம் வருமாறு :—

''விவசாயிகள்' என்ற பெயரால், நிலப் பிரபுக்கள் -- வன்முறைச் சக்திகள் -- பிற்போக்குச் சக்திகளின் துணையுடன் ஜூலை 5-ம் நாள் நடத்திய அர்த்தாலில் வன்முறைச் செயல்களின் தொடர்பாக உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழ்நாட்டில் கடந்த 1971-ம் ஆண்டுத் தேர்தலில், பிற்போக்குக் கூட்டணியில் இடம் பெற்றிருந்த ஆளும் காங்கிரசு -- வலது கம்யூனிஸ்டுக் கட்சி ஆகியவைகள், தாங்கள் மக்களிடம் எடுத்துச் சொன்ன முற்போக்குக் கொள்கைகளுக்கும் -- கருத்துக்களுக்கும் மாறாக, நிலப்பிரபுக்களோடு சேர்ந்துகொண்டு -- நிலப்பிரபுக்களின் தலைமையில் பிற்போக்குச் சக்திகளாக மாறியதோடு அல்லாமல், வன்முறைச் செயல்களின்மூலம் ஒரு முற்போக்கு அரசுக்குத் தொல்லை கொடுக்க முனைந்ததைத் தோழமைக் கட்சித் தலைவர்கள் வன்மையாகக் கண்டித்தனர்.

ஆளும் காங்கிரசுக் கட்சி மத்திய அரசில் செயல்படுத்துவதாகக் கூறுகின்ற சோஷலிசச் சித்தாந்தங்களுக்கு எதிராகத் தமிழ்நாட்டில் உள்ள ஆளும் காங்கிரசார் செயல்படுவதை வெளிப்படையாக ஆதரிக்கும் வகையில் ஆளும் காங்கிரசுக் கட்சித் தலைவர் சங்கர் தயாள் சர்மாவும் -- தமிழ் நாட்டைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களும் கருத்துக்கள் தெரிவித்துக்கொண்டிருப்பது, ஆளும் காங்கிரசுக் கட்சியின் கொள்கைக் குழப்பத்தை எடுத்துக் காட்டுகிறது என்று தோழமைக் கட்சித் தலைவர்கள் குற்றஞ் சாட்டினர்.

ஜூலை 5-ம் நாள் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறக்கூடிய அளவுக்கு நடைபெற்ற அசம்பாவித நிகழ்ச்சிகள்பற்றித் தோழமைக் கட்சித் தலைவர்கள் ஆராய்ந்தனர் ; அராஜகத்தில் பயிற்சிபெற்ற கூட்டத்தினர் சாலைகளில் போக்குவரத்தைத் தடை செய்து -- கட்டை வண்டிகளைக் குறுக்கே நிறுத்தியும் -- கற்களை வைத்தும் -- பஸ்களைக் கொளுத்தியும் வன்முறைச் செயல்களை நிகழ்த்தியபோது அவைகளைச் சமாளித்துத் தடைகளை அப்புறப்படுத்தச் சென்ற போலீசாரைச் சூழ்ந்து தாக்கி நடத்திய பயங்கர -- பலாத்காரச் செயல்கள்தான் துப்பாக்கிப் பிரயோகத்தைத் தவிர்க்க முடியாததாகிவிட்டது என்பதைத் தோழமைக் கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டினர்.

முதல்வரும் -- விவசாயச் சங்கப் பிரதிநிதிகளும் சந்தித்துப் பேசுவதற்குப் பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் மூக்கையா தேவர், தாம் எடுத்த பெரும் முயற்சிகளை விளக்கிக் கூறினார்.

சந்தித்துப் பேசுவதற்கு முதலமைச்சர் தயாராக இருப்பதாகப் பலமுறை கூறியும், விவசாயச் சங்கப் பிரதிநிதிகள், 'எங்களை யாரும் அழைக்கவில்லை' என்று திரித்துக் கூறியிருப்பதைத் தோழமைக் கட்சித் தலைவர்கள் கண்டித்தனர்.''

தேசிய நெடுஞ்சாலைகளாக மேலும் 14 சாலைகள்

தமிழக அரசிடம் மத்திய அரசு கோரிக்கை

சென்னை ஜூலை 9—

''சாலைகளைத் தேசிய நெடுஞ்சாலைகளாக அறிவிக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் தமிழக அரசு கோரியிருக்கிறது''

என்று தேசிய நெடுஞ்சாலைத் தலைமைப் பொறியர் சி. வி. பத்மநாபன் கூறினார் ; இத்தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது :—

''கடற்கரை ஓரத்தில் சென்னையையும் — கன்னியாகுமரியையும் இணைக்கும் சாலை (600 கிலோ மீட்டர் அதாவது 375 மைல்) ; நாகப்பட்டினம்—மைசூர் எல்லைச் சாலை (500 கிலோ மீட்டர் அதாவது 312 மைல்) ; கடலூர்—விருத்தாச்சலம்—சேலம் சாலை (193 கிலோ மீட்டர் அதாவது 121 மைல்) ; தமிழகத்துக்குள் உள்ளவரை மதுரை—கொச்சிச் சாலை (117 கிலோ மீட்டர் அதாவது 73 மைல்) ; கடலூர்—சித்தூர் சாலை (203 கிலோ மீட்டர் அதாவது 127 மைல்)—ஆகிய சாலைகளை நெடுஞ்சாலைகளாக அறிவிக்கும்படி தமிழக அரசு கேட்டிருக்கிறது ; பாளையங்கோட்டை—தூத்துக்குடி சாலையை (48 கிலோ மீட்டர் அதாவது 30 மைல்) ஏற்கனவே தேசிய நெடுஞ்சாலையாக மத்திய அரசு அறிவித்திருக்கிறது.

கிழக்குக் கடற்கரைச் சாலையில் புதுப் பாலங்கள் கட்ட மத்திய அரசிடம் ரூ. 2.30 கோடி கடன் வாங்கியிருக்கிறது ; இந்த வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

பெரிய நகரங்கள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னையில் வெலிங்டன் -- வாலாசா பாலங்களை விரிவுபடுத்தும் வேலைகள் நடைபெறுகின்றன ; இந்த வேலைகள் இன்னும் 3 திங்களில் முடிந்துவிடும்.

பூங்கா இரயில் நிலையத்துக்கு எதிரில் நடைபாதை ஒன்றுக்கும், மூர்மார்க்கெட்டுக்கும் -- சென்ட்ரல் இரயில் நிலையத்துக்கும் இடையே உள்ள பாலத்தை விரிவுபடுத்துவதற்கும் மாநில அரசு அனுமதி அளித்திருக்கிறது ; இது சம்பந்தமான வேலை விரைவில் துவங்கும்.

ஜெமினி மேம்பால வேலைகள் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிந்துவிடும்.

இரயிலில் கள்ளப்பயணம்

பம்பாய், ஜூலை 8—

கடந்த ஆண்டில் மேற்கிந்திய இரயில்வேயில் டிக்கெட்டின்றிப் பயணம் செய்ததாக 2,22,000 பேர் பிடிபட்டனர்.

இவர்களிடமிருந்து ரூ. 22 இலட்சம் அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது.

மூளை நோயை ஆராய நிறுவனம்

இப்போதெல்லாம் மூளைப் பகுதியில் இரத்த நாளங்கள் உடைவது கட்டிகள் ஏற்படுவது போன்ற 'கொல்லும்' நோய்க்கு ஆளானவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகின்றன.

என்ன குறை காரணமாக இந்த நோய்கள் ஏற்படுகின்றன -- இவை வராமல் தடுப்பது எப்படி வந்தபின் இதற்கு மிகவும் நிச்சயமான சிகிச்சை என்ன -- என்பனவற்றை ஆராய்வதற்காக புதிய ஆராய்ச்சி ஒன்று லண்டனில் அமைக்கப்படுகிறது.

20 இலட்சம் பவுன்கள் செலவில் இந்த நிலையம் அமைக்கப்படுகிறது.

கிராம மக்களுக்கு மருத்துவ வசதி

டாக்டர்கள் உணருவது அவசியம்

செங்கற்பட்டு, ஜூலை 10—

'நகரங்களிலேயே வேலைபார்க்கவேண்டும் என்று நினைக்காமல், கிராமங்களுக்குச் சென்று பணிபுரிய டாக்டர்கள் முன்வர வேண்டும் ; ஆனால், இன்றைய நிலை என்ன ? 20 சதவிகிதம் பேர் வசிக்கும் நகரங்களை நோக்கி 80 சதவிகிதம் டாக்டர்கள் ஓடுகிறார்கள் ; 80 சதவிகித மக்கள் வசிக்கும் கிராமப் பகுதிகளில் 20 சதவிகித டாக்டர்கள்தான் இருக்கிறார்கள்.

''ஒருவர் டாக்டர் படிப்பு படித்து பட்டம் பெற அரசாங்கம் ரூ. 80,000 செலவிடுகிறது ; இது மக்கள் கொடுக்கும் வரிப்பணமாகும் ; இப்படி வரி கொடுக்கும் கிராம மக்கள், தங்களுக்கு மருத்துவ வசதிவேண்டும் என்று கேட்பதில் நியாயம் உள்ளது ; இதை டாக்டர்கள் உணரவேண்டும்.

''கிராமங்களுக்குச் சென்றால், குடியிருக்கச் சரியான வீடு இல்லை -- சினிமாக்கள் இல்லை -- சாலை வசதிகள் இல்லை என்ற புகார்களை நான் அறிவேன் ; என்றாலும், உங்கள் எல்லோரையும் நகரங்களிலேயே இருக்க எப்போதுமே கிராம மக்கள் விட்டு வைத்திருப்பார்கள் என்று நினைக்கிறீர்களா ?''

-- ஆளுநர் கே. கே. ஷா

(மருத்துவக் கண்காட்சித் திறப்பு விழாவில்)

தொழில்துறை வளர்ச்சியில் தமிழகம் காட்டும் அக்கறை

வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க வாய்ப்பு

அம்பத்தூர் தொழில் பேட்டையைத் திறந்துவைத்து முதலமைச்சர் யோசனை

சென்னை, ஜூலை 8 —

சென்னை -- அம்பத்தூரில், தமிழ்நாடு சிறு தொழில் வாரியத்தின் 'சிட்கோ' நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள புதிய தொழில் பேட்டையை கடந்த 4-7-72 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்துவைத்தார். இவ்விழாவுக்குத் தொழிலமைச்சர் திரு. செ. மாதவன் தலைமை வகித்தார்.

சிறு சிறு தொழில்களை நடத்துவோருக்கென உருவாக்கப்பட்ட இந்தத் தொழிற்பேட்டையில் முதல் கட்டமாக 17 தொழிற்கூடங்கள் ஐந்தே திங்களில் ரூ. 9 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன ; இத்தொழிற்கூடங்கள் நாளடைவில் தொழில் நடத்துவோருக்கு உரிமையாக்கப்பட்டுவிடும் ; அடுத்த கட்டமாக இதே பகுதியில் மேலும் 25 தொழிற்கூடங்கள் கட்டப்படவிருக்கின்றன.

இதேபோன்ற தொழிற்பேட்டைகளைத் தமிழகத்தின் மற்றப் பகுதிகளிலும் அமைக்க 'சிட்கோ' நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இத்தொழிற்கூடங்களைப் பெறுவதில்--பொறியியல் கற்றுத் தொழில் துவங்க முன்வரும் பட்டதாரி இளைஞர்கட்குச் சிறப்புச் சலுகைகள் வழங்கப்படும்.

இத்தொழிற்பேட்டையைத் துவக்கிவைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பேசியபோது குறிப்பிட்டதாவது :—

''தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்த பிறகுதான் தவணை முறையிலான கட்டடங்கள் கட்டப்பட்டுத் தொழில் துறைக்கு வழங்கப்படும் ஏற்பாடு நடைபெற்றுள்ளது.

இங்கு அமைக்கப்பட்டுள்ள 17 தொழிற் கூடங்களில் சிலவற்றைப் பார்த்தோம் ; இது போன்ற சிறு தொழிற் கூடங்கள் நாடெங்கும் தோன்றவேண்டும்.

சேலத்திலும் -- கோவையிலும் மட்டுமில்லாமல் சிறிய சிறிய கிராமத்தையும் இணைக்கின்ற அளவுக்குச் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனங்களை எங்கெங்கே பயன்படுத்த முடியுமோ அங்கெல்லாம் பயன் ஏற்படும் வகையில் அதற்கான வாய்ப்புக் கூறுகளை ஏற்படுத்தவேண்டும்.

சிறிய தொழிலானாலும் சரி -- பெரிய தொழிலானாலும் சரி -- இரண்டிலும் அரசுக்கு இருக்கும் அக்கறையுடன் தொழிலாளர்களுக்கு -- தொழிலை நடத்துவோருக்கும் ஆக மூவருமே அதன் வளர்ச்சியில் பங்கு இருக்கின்றது.

இன்று ஒரே பகுதியில் 17 சிறு தொழிற்கூடங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன ; இதைத் தொடர்ந்து பல இடங்களிலும் இதுபோன்ற சிறு தொழிற்கூடங்கள் பெருகிடத் தொழிலை நடத்துவோர் ஏராளமாக வந்து பங்கு பெறுவதன் மூலம், நாட்டில் பட்டம் பெற்ற இளைஞர்களுக்கும்— வேலையில்லாத இளைஞர்களுக்கும் வாய்ப்புகள் அளித்திட வேண்டும்.

பட்டம் பெற்றவர்களையும் வேலையில்லாத இளைஞர்களையும் இதில் உட்படுத்திக் கொள்வதன் மூலம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தால் எழுப்புகின்ற குரல் ஓரளவு குறையும்.

படித்த வாலிபர்கள் இதுபோன்ற வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொண்டு மற்றவர்களுக்கும் இதில் வேலை கொடுத்து உதவ வேண்டும்.

இப்படி நான் சொல்வதால், 'வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியாமல் அரசு ஏதோ ஒரு குறுக்கு வழியைச் சொல்கிறது' என்று கருதவேண்டாம்.

இன்று பொறியியல் படித்த மாணவர்கள் பல பேர் இருக்கிறார்கள் ; அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள மெத்தவும் ஏற்ற வாய்ப்புக்களை உண்டாக்க இது போன்ற துறைகளில் அவர்களைப் பங்கு பெறச் செய்யலாம் என்ற அழைப்பினைத்தான் விடுக்கிறேன்.

எனவே, அரசு பெரிய அளவில் தொழில் துறையைப் பெருக்க எடுத்துக்கொண்டுள்ள அதே நேரத்தில் தொழில் அதிபர்களுக்கும் இந்த அழைப்பினை விடுக்கிறேன்.''

நாட்டின் வளம் மேம்படுவதற்கு செயல்படுவது அவசியம்

அமைச்சர் செ. மாதவன் வலியுறுத்தல்

தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள் தமது தலைமையுரையில் கூறியதாவது :—

''தமிழ்ச் சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சிக்காக அரசினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைதான் சிறு தொழில் வாரியம்.

தமிழ்நாடு இன்று தொழில் வளங்களைப் பெருக்கி வருகிறது ; குறைந்தகாலத்துக்குள் தொழில் துறையில் வளர்ச்சி ஏற்படச் சிறந்த முறையில் பாடுபடுகிறது ; அந்த வகையில், கழக ஆட்சியில் சிறு தொழில்கள் முன்பு 11,000 ஆக இருந்தது -- இப்போது 23,000-த்தைத் தாண்டியிருக்கிறது.

தொடர்ந்து தொழில்கள் இங்கு வளர, தொழில்களைத் தொடங்குவோருக்கு இடம்—இயந்திரங்கள்—மூலப் பொருள்கள்—உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை ஆகியவற்றைத் தேடித் தருவதற்கும் அரசு தன்னாலான உதவிகளையெல்லாம் செய்து தருகிறது.

இன்றுள்ள ஒரு பெரிய பிரச்சினை, மூலப் பொருட்கள்தாம் ; இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதென்பது மாநில அரசால் மட்டும் முடிவதல்ல !

இதில் மாநில அரசின் தேவைகளைக் கணக்கெடுத்துத் தட்டுப்பாட்டில்லாத முறையில் வழங்க மத்திய அரசின் ஒத்துழைப்பு நமக்கு மிகவும் அவசியமாகிறது.

இதையெல்லாம்பற்றி அண்மையிலேகூட மாநில அரசு, மத்திய அரசுக்கு எடுத்துக் கூறியிருக்கிறது ; 'மூலப் பொருட்கள் விலையில் சரளமாகக் கிடைக்கிறதே' என்பதையும் சுட்டிக் காட்டி வாதிட்டிருக்கிறது.

இங்கு நாம் 5 திங்களில் கட்டடங்களைக் கட்டித் தொழில் தொடங்குவோருக்குப் புதிய ஊக்கத்தை அளித்திருக்கிறோம் ; இதில் நாம் வெற்றிபெற்றுவிட முடிந்திருக்கிறது ; ஆனால், தட்டுப்பாடில்லாமல் தொடங்கப்பட்ட தொழில்கள் நடைபெற மத்திய அரசும் மனம்வைக்க வேண்டியிருக்கிறது.

அத்துடன், உற்பத்திப் பொருட்களை அரசும் -- அரசுச் சார்புடைய துறைகளுமே வாங்குவது மட்டும் போதாது ; வெளி மாநிலங்களிலும் சந்தை ஏற்பட வேண்டும் ; அப்போதுதான் தொழிலில் வளர்ச்சி பெருகும்.

இதற்கும்கூட, 'சிட்கோ' மூலமாகவே வாங்கி விற்க ஒரு ஏற்பாடு செய்யலாம் என்கின்ற பரிசீலனை ஒன்றும் மாநில அரசின் கவனத்தில் இருக்கிறது.

இங்கு தொழில்கள் நடத்துவதற்குத் தொழில் அமைதி தேவை என்று சொல்லத் தேவையில்லை ; ஏனென்றால், தமிழ்நாட்டுக்குத் தொழில் நடத்தவந்த மேற்கு வங்கத்தைச் சேர்ந்த ஒருவர் இங்கு பேசும்போது, 'மற்ற மாநிலத்தவருக்கும் தொழிலைத் தொடங்கத் தமிழகம் எப்படிப் புகலிடம் தந்திருக்கிறது' என்பதைப்பற்றிக் குறிப்பிட்டார்.

இந்தச் 'சிட்கோ' நிறுவனம், நகர்ப் பகுதிகளில் மட்டுமல்ல -- பட்டிதொட்டி யெங்கும் இதுபோன்ற தொழில் தொடங்க முன்வருபவர்களை யெல்லாம் தேடிச் செல்ல வேண்டும் -- என்ற தமிழக அரசின் கொள்கையை நிறைவேற்றும்வகையில் செயல்பட்டு, அந்தப் பணியில் நாட்டின் வளத்தை மேம்படுத்துவதில் கண்ணும் கருத்துமாக இருந்திடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.''

சீர்குலைவு முறைகள் மூலம் கழக அரசைக் கவிழ்க்க முயற்சி

வன்முறைக்கு வித்திடும் வலது கம்யூனிஸ்டு-- இந்திரா காங்கிரசுக் கட்சிகளின் போக்கு : ஜனசங்கத் தலைவர் கடும் குற்றச்சாட்டு

கல்கத்தா, ஜூலை 10 —

''தமிழ் நாட்டில் இந்திரா காங்கிரசுக் கட்சியும் -- வலது கம்யூனிஸ்டுக் கட்சியும் சேர்ந்துகொண்டு சீர்குலைவு முறைகள் மூலம் தி மு. கழக அரசைக் கவிழ்க்க முயற்சிகள் செய்கின்றன !

''தி. மு. கழக அரசைக் கவிழ்ப்பதில் இந்த இரு கட்சிகளும் முனைந்திருக்கின்றன, அர்த்தால் நடைபெற்ற நாளன்று நடைபெற்ற, வன்முறைகளை இந்த இரு கட்சிகளுமே கண்டிக்கவில்லை !

''மின்சாரக் கட்டணத்தை உயர்த்த வேண்டும்மென்று மத்திய அரசுதான் மாநில அரசிடம் வலியுறுத்தியது ! ஆகவே தமிழ் நாட்டில் மின் கட்டண உயர்வுக்கு எதிராக இந்திரா காங்கிரசுக் கட்சி கிளர்ச்சி நடத்துவது பொறுப்பற்ற செயலாகும்.''

-- ஏ. பி. வாஜ்பேயி

(செய்தியாளர்களிடம்)

காமராசர் தலைமையில் வெறிக்கூத்து

'மௌன ஊர்வலம்' என்ற பெயரால் குண்டர்கள் படை

திரைப்பட அரங்குகளில் காலிகள் கைவரிசை-- திட்டமிட்ட தாக்குதலால் பொதுமக்கள் -- போலீசார் காயமடைந்தனர்

சென்னை சூலை 10—

'மௌன ஊர்வலம்' என்ற பெயரால் நேற்று சென்னையில் சிண்டிகேட்--இந்திரா கட்சி--வலது கம்யூனிஸ்டு--சுதந்தரா ஆகிய கட்சிகள் கூட்டாக நடத்திய ஊர்வலம், திட்டமிட்ட வன்செயல்களில் ஈடுபட்டு--வெறியாட்டங்களை நடத்தியிருக்கிறது; இந்த வெறியர்களின் ஊர்வலத்துக்கு சிண்டிகேட் தலைவர் காமராசரும் மற்றும் அவருடைய கூட்டாளிக் கட்சித் தலைவர்களும் தலைமை வகித்திருக்கின்றனர்.

இறந்தவர்கட்கு அனுதாபம் தெரிவிக்கும்பொருட்டு அமைதி ஊர்வலம் நடத்தப்போவதாகக் கூறி அனுமதி பெற்று ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்தவர்கள், தடிக் கம்பு--சவுக்குக் கழிகள்--பெட்ரோல் சகிதம் குண்டர்களை அணிவகுத்து அழைத்துசென்று ஆங்காங்கு தாக்குதலைத் திட்டமிட்டு நடத்தியிருக்கின்றனர்.

நேற்று மாலை 3-30 மணியளவில் தேனாம்பேட்டை காங்கிரசு மைதானத்திலிருந்து துவங்கிய மௌன ஊர்வலம், கழகப்பொருளாளர் புரட்சிநடிகர் எம் ஜி.ஆர். அவர்கள் நடித்த 'நான் ஏன் பிறந்தேன்' எனும் திரைப்படம் நடைபெறும் குளோப் தியேட்டருக்கு அருகில் வந்ததும் வெறி பிடித்த கூட்டமாக மாறியது; கல்—கத்தி—சவுக்குக் கட்டைகளுடன் வந்த அவர்கள், குளோப் திரைப் படக் கொட்டகையைத் தாக்கினர்.

அந்தத் திரைப்படக் கொட்டகை வாயிலில் வைக்கப்பட்டிருந்த புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களின் பெரிய 'பேனர்' படங்களைச் சுக்குநூறாகக் கத்தியால் கிழித்தனர்.

இத்துடன் ஆத்திரம் தணியாத அந்த மௌன ஊர்வலத்தினர், புரட்சி நடிகரின் திரைப் படப் பானர்களைத் தீயிட்டுக் கொளுத்தினர்; கொழுந்துவிடும் தீயைக் கண்டு காட்டுமிராண்டிகள் போல் கூத்தாடினர்.

அந்த வன்முறையாளர்களின் கல்லெறியால் தியேட்டரில் நிறுத்தப்பட்டிருந்த டாக்சிகளின் மீட்டர்--கண்ணாடி ஆகியவைகள் நொறுக்கப்பட்டன.

திரைப்படம் பார்க்கவந்த 'கியூ'வில் நின்ற தாய்மார்களும் --பெரியவர்களும் குழந்தைகளும், படம் பார்த்துவிட்டு வந்தவர்களும் இந்தக் கல்லெறியால் பீதி கொண்டு ஓடத் தொடங்கினர்.

அடுத்து, முதல்வர் கலைஞர் எழுதிய -- மு. க. முத்து நடித்த 'பிள்ளையோ பிள்ளை' திரைப்படம் பிளாசா தியேட்டர் அருகில் வந்ததும் மௌன ஊர்வலம் மீண்டும் வெறிபிடித்த கூட்டமாயிற்று.

அங்குள்ள திரைப்பட பேனர்களையும், மு. க. முத்துவின் 'கட்--அவுட்' படத்தையும் கிழித்து--அவற்றைச் சாலையின் நடுவே போட்டு--அதன் மேல் பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தி வெறிக் கூத்தாடினர்.

கையில் கொண்டுவந்த தடிகளில் கறுப்புத் துணிகளைச் சுற்றி தீப்பந்தம் தயாரித்தனர்.

வெறிக் கூச்சலோடு திரைப்பட பேனர்களுக்குத் தீ வைத்துக் கும்மாளமிட்டனர்.

தாக்குதலை -- பிளாசா தியேட்டருக்குள்ளும் துவக்கினர்; பொது மக்களையும் கற்களை வீசித் தாக்கினர்; தியேட்டரில் நின்றிருந்த கழகத் தோழர் சாமியின் காலில் ஒருவன் விறகுக் கட்டையால் அடித்தான்.

பிளாசா தியேட்டருக்குள்ளே இருக்கும் சுகுணவிலாச சபைக் கட்டடத்திற்கு அருகில் கிடந்த செங்கற்களை எடுத்து வீசத் தொடங்கினர்.

தியேட்டருக்குள் இருந்தவர்கள் பொது மக்களைக் காக்கும் நோக்கத்தோடு கதவுகளையும் -- சன்னல்களையும் மூடினர்; இருப்பினும், கல் வீச்சு சரமாரியாக நடந்தது; இதனால், திரைப்படக் கொட்டகையின் கண்ணாடி சன்னல்கள் நொறுங்கின.

தியேட்டருக்குவெளியே நிறுத்தப்பட்டிருந்த கார்களும் கல்வீச்சுக்கு இரையாயின; கல்வீச்சினால் கீழ்க்கண்ட கார்களின் கண்ணாடிகள் நொறுங்கின:—

டிம். எம். சி.	1229
எம். எஸ். கியூ	1944
எம். எஸ். எல்.	8190
எம். டி. ஜே.	1811
எம். எஸ். எல்.	9900

இவை தவிர, ஐம்பதுக்கு மேற்பட்ட சைக்கிள்களும் நொறுக்கப்பட்டிருக்கின்றன.

பிளாசா தியேட்டருக்கு வெளியே கடலை விற்றுக்கொண்டிருந்தவரைத் தாக்கியதோடு -- அவர் விற்பனைக்கு வைத்திருந்த பாட்டுப் புத்தகங்களையும் எடுத்துக் கொளுத்தினர்.

வெறியாட்ட ஊர்வலத்தினர், சாந்தமே உருவாக நிற்கும் அண்ணா சிலை மீதும் கற்களை வீசினர்.

அடுத்து அந்த வன்முறையாளர்களின் தாக்குதல், கோஷா மருத்துவமனை அருகில் நடந்தது.

மருத்துவமனைக் கட்டடத்தின் ஓடுகளைப் பிடுங்கி அடித்தனர்; இதனால், 'துர்க்கா பவன்' எனும் ஓட்டலும் -- அதனருகில் இருந்த புத்தகக் கடையும் பெரும் சேதத்திற்கு உள்ளாகியது.

மேலும், மீனவர்கள் வாழும் குடிசைப் பகுதிகளில் புகுந்து தாக்கினர்; பெண்டு பிள்ளைகளை வரைமுறையில்லாமல் கற்களாலும் -- கழிகளாலும் தாக்கினர்; மூவருக்குப் பலத்த காயம் ஏற்பட்டது.

கடற்கரையை அடைந்த பிறகும் அந்த வன்முறையாளரின் வெறியாட்டம் நிற்கவில்லை; பாதுகாப்புக்காக நின்றிருந்த போலீசாரை வாய்க்கு வந்தபடி ஏசித் தாக்கத் தொடங்கினர்.

இதனால் காயமடைந்தவர்கள் விவரம் வருமாறு:—

ஆயுதப் போலீசுப் பிரிவைச் சார்ந்த டி.எஸ்.பி. ஒருவர்.

போலீசு இன்ஸ்பெக்டர்கள் இருவர்.

போலீசு சப்-இன்ஸ்பெக்டர்கள் இருவர்.

போலீசு ஹெட் கான்ஸ்டபிள்கள் இருவர்.

போலீசு கான்ஸ்டபிள்கள் பதினைந்து பேர்.

இத்தனைப் பேர் தவிர, பொதுமக்கள் பலருக்கும் காயத்தை ஏற்படுத்தினர்.

அனுதாபத்தைப் பெற வேண்டிய மவுன ஊர்வலம், இந்த வெறியாட்டம் காரணமாகச் சென்னை நகர மக்களின் வெறுப்பையும் -- கசப்பையும் -- அனுதாபத்தையும் பெற்றுவிட்டது.

ரூ. 1.77 கோடி மதிப்புள்ள கடத்தல் பொருள்கள் -- ஒரே மாதத்தில் கைப்பற்றப்பட்டன

புதுடில்லி, சூலை 10—

வெளிநாடுகளிலிருந்து கடத்தி வரப்படும் பொருட்களைச் சுங்கத் துறை அதிகாரிகள் மிகக் கவனமாக இருந்து கண்டுபிடித்து வருகிறார்கள்.

கடந்த மே மாதத்தில் மட்டும் ரூ. 1 கோடியே 77 இலட்சம் மதிப்புள்ள பொருட்களைக் கைப்பற்றினர்.

ரூ. 3 இலட்சம் மதிப்புள்ள தங்கம் -- ரூ 24 இலட்சம் மதிப்புள்ள கடிகாரங்கள் -- ரூ. 68 இலட்சம் பட்டுநூல் -- ரூ. 52 இலட்சம் இதர பெறுமானமுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டன; ரூ 9 இலட்சம் ரொக்கப்பணம், ரூ. 8 இலட்சம் மதிப்புள்ள கார், லாரி, படகு ஆகியவைகளும், வெளி நாட்டுக்குக் கடத்த முயன்ற ரூ. 13 இலட்சம் வெள்ளி ஆகியவைகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

தத்துவ இயல் பரீட்சையில் ஒரே ஒரு மாணவர் தேர்வு

திருச்சி, சூலை 10—

இந்த ஆண்டு நடைபெற்ற பி. ஏ. பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியானது தெரிந்ததே.

இதில், தத்துவ இயல் பிரிவில், தமிழ் நாட்டிலேயே ஒரே ஒரு மாணவர்தான் முதல் வகுப்பில் தேறியிருக்கிறார்; எஸ். பாலகிருஷ்ணன் என்னும் அந்த இளைஞர், திருச்சியில் உள்ள நேஷனல் கல்லூரி மாணவராவார்.

மூன்று திங்களுக்குள் நீதி விசாரணை அறிக்கை தாக்கல்

சென்னை, சூலை 10—

"கடந்த புதன் கிழமையன்று நடைபெற்ற போலீசுத் துப்பாக்கிப் பிரயோகங்கள் பற்றி விசாரணை நடத்துவதற்காகத் தமிழ்நாடு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள நான்கு மாவட்ட நீதிமதிகள், அடுத்த மூன்று திங்களுக்குள் தங்களுடைய விசாரணை அறிக்கைகளை அரசிடம் அளிப்பர்"

என்று தமிழக அரசின் தனி இதழ் அறிவிப்பு ஒன்று கூறுகிறது.

குழுக் கூட்டம்

உடையார்பாளையம் வட்ட தி.மு.க. பொது உறுப்பினர்--செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் 11-7-72 காலை 10 மணியளவில் ஜெயங்கொண்டம் பிரிமியர் கலா மேலசில் நடைபெறும்; வட்ட உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் க.சொ. கணேசன் அறிவிக்கிறார்.

திரைப் படக் கதை--வசனம் மூலம் ரூ. 1-இலட்சம் கண் சிகிச்சை முகாமுக்குக் கிடைக்க ஏற்பாடு

கூட்டுறவுச் சங்க விழாவில் முதல்வர் விழைவு

சென்னை, சூலை 10–

சென்னையிலுள்ள -- தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத் திறப்பு விழாவும், மாவட்ட -- வட்டக் கூட்டுறவு ஒன்றியங்களின் கருத்தரங்கு நிறைவு விழாவும் நடைபெற்றது.

கூட்டுறவு ஒன்றியத் துணைத் தலைவர் கொளத்தூர் கோதண்டம் பேசுகையில, 'முதலமைச்சர் கலைஞர் அவர்கள், கூட்டுறவுத் துறைக்கான ஒரு திரைப் படத்திற்கு திரைக் கதை -- வசனம் எழுதித் தர ஒப்புக்கொண்டிருக்கிறார்' என்று தெரிவித்தார்.

உடனே முதலமைச்சர் கலைஞர் அவர்கள் குறுக்கிட்டு, 'கூட்டுறவுத்துறை பற்றிய திரைப் படத்திற்கான கதை--வசனத்தை எழுதுவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை; ஆனால், நான் பிறருக்கு பணமில்லாமல் கதை—வசனம் எழுதுவதில்லை என்பது தெரிந்ததே; இந்தக் கூட்டுறவுத் துறையில் பல இலட்சத்திற்குப் பணமிருப்பதாகவும் அவர்கள் சொல்லுகிறார்கள்; ஆகவே, நான் எழுதப்போகும் கூட்டுறவுத் துறை பற்றிய திரைப் படத்திற்கான கதை-வசனத்திற்கு ஓர் இலட்சம் ரூபாய் தந்தால்தான் அந்தப் பணியை மேற்கொள்வேன்; அந்த ஓர் இலட்சம் ரூபாயையும் நான் கண் சிகிச்சை முகாமிற்கு அளிக்கவிருக்கிறேன்; அப்படி ஒரு தேதி குறித்து அந்த ஓர் இலட்சம் ரூபாயைக் கண் சிகிச்சை முகாமிற்கு இவர்கள் அளிக்க வழிசெய்வார்களானால், அந்த நாளிலிருந்து நான் கதை--வசனம் எழுதும் பணியை மேற்கொள்வேன்' என்றார்.

உடனே, துணைத் தலைவர் கொளத்தூர் கோதண்டம், 'கூட்டுறவுத் துறையினரின் ஒப்புதலுடன் நிச்சயம் ஓர் இலட்சம் ரூபாய் கதை--வசனம் எழுதக் கலைஞரிடம் அளிக்கப்படும்' என்று உறுதி கூறினார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

11--7--72

பெரம்பலூர்

நகர தி.மு.க. -- அண்ணா மன்றம் -- எம். ஜி. ஆர். மன்றம் ஆகியவை சார்பில் மாலை 6-மணிக்கு மேற்கு வானொலித் திடலில்; தலைவர்: மு. அட்சயகோபால்; பேசுவோர்: அமைச்சர் எஸ். ஜே. சாதிக பாட்சா, எம். எஸ். வெங்கடாசலம், ஆ. துரைராசு எம்.பி., ஜே எஸ். இராசு எம்.எல்.ஏ., அ. காஜா மொய்தீன், அரு. சோமசுந்தரம், மு. முஸ்தாபா, மற்றும் பலர்;

சங்கமங்கலம்

தி.வி.தொ.மு. சங்கச் சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர்: மா. கோவிந்தசாமி; பேசுவோர்: வே. இராசன், அ. சந்தானம், அ. இராசமாணிக்கம் எம்.எல்.ஏ., பொ. கணபதி, இரா. கல்யாணசுந்தரம், கோ. செல்வராசு, நா. பட்டாணி, கோ. சாமிநாதன் மற்றும் பலர். (முருகு பாண்டியன் கலை நிகழ்ச்சி நடைபெறும்).

து.ப. அழகமுத்து இல்லத்திருமணம்

சட்டமன்ற ஆளுங் கட்சித் தலைமைக் கொறடா திரு. து. ப. அழகமுத்து அவர்களின் மூத்த மகள் செல்வி கல்பனா — செல்வன் இலட்சுமணன்; து. ப. அழகமுத்து அவர்களின் இரண்டாவது மகள் செல்வி மாலதி — செல்வன் மோகன் ஆகியோர் திருமணம் 12—7—72 காலை 9-மணிக்கு திருச்சி கண்டோன்மெண்ட் வாசவி மகாலில், கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலும்— பொதுச்செயலாளர் நாவலர் முன்னிலையிலும் நடைபெறும்; சட்டமன்றப் பேரவைத் தலைவர் கே. ஏ. மதியழகன், மேலவைத் தலைவர் சி. பி. சிற்றரசு மற்றும் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற -- சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

அதிகாரிகளுக்கு ஆந்திர முதலமைச்சர் கடும் எச்சரிக்கை

ஐதராபாத், சூலை 10—

"நிலச்சீர் திருத்தங்கள் இதர தீவிரமான சீர்திருத்தச் சட்டங்களைச் செயல்படுத்தும் துறையில் இடையூறுகள் செய்து சீர்குலைக்க எந்த அதிகாரி முயற்சி செய்தாலும், அவர்கள் காரணமாக இருந்தாலும் -- கலெக்டராக இருந்தாலும் அரசு கடுமையாக நடவடிக்கை எடுக்கும்; அவசியமானால் வழக்கும் தொடரப்படலாம்" என்று, ஆந்திர முதலமைச்சர் நரசிம்ம ராவ் எச்சரித்திருக்கிறார்.

பெரம்பலூர் ஊராட்சிஒன்றியம்

அமைச்சர் சாதிக்பாட்சாவுக்கு வரவேற்பு

பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம் சார்பில் 11–7–72 காலை 9 மணிக்கு பொதுப் பணித் துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கட்கு வரவேற்பு அளிக்கப்படும்; திரு. மு. அட்சயகோபால் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் திரு. ஜே.எஸ். இராசு எம். எல். ஏ. அவர்களும் கலந்துகொள்வார்.

பெரம்பலூர் மாணவர் இலக்கிய மன்றம்

பெரம்பலூர் அரசு உயர்நிலைப் பள்ளி மாணவர் இலக்கிய மன்றத் திறப்பு விழா, 11–7–72 காலை 11 மணிக்கு திரு. கே. எஸ். இராசு எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறும்; அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் கலந்து கொண்டு புதிய ஆய்வுக் கூடத்தையும் -- கலை அறிவியல் பொருட் காட்சியையும் திறந்துவைப்பார்; திரு. மு. அட்சய கோபால் சிறப்புரையாற்றுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-[illegible]) [illegible] வெளியிடப்படுகிறது.